


முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (17.12.2024) தலைமைச் செயலகத்தில், எழுத்தாளர் இமையம் எழுதிய "கலைஞரின் படைப்புலகம்" புத்தகத்தை வெளியிட்டார். இந்நிகழ்வின்போது, பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், பள்ளிக் கல்வித் துறை செயலாளர் திருமதி எஸ்.மதுமதி, தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்தின் தலைவர் திண்டுக்கல் ஐ. லியோனி, மேலாண்மை இயக்குநர் முனைவர் பொ. சங்கர், இணை இயக்குநர் சங்கர சரவணன், எழுத்தாளர் மற்றும் நூல் தொகுப்பாசிரியர் இமையம், ஆலோசகர் அப்பன்னசாமி ஆகியோர் உடனிருந்தனர்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (16.12.2024) முரசொலி நாளேட்டின் தணிக்கையாளர் சிவசுப்பிரமணியன் அவர்களின் சென்னை, மேற்கு மாம்பலத்திலுள்ள இல்லத்திற்கு நேரில் சென்று, உடல்நலக்குறைவால் காலமான அவரது தந்தை தியாகராஜன் அவர்களின் உடலுக்கு மலர்மாலை வைத்து அஞ்சலி செலுத்தி, குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார். இந்நிகழ்வின்போது, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு, சட்டமன்ற உறுப்பினர் த.வேலு ஆகியோர் உடனிருந்தனர்.

### கைது செய்யப்பட்டுள்ள தமிழ்நாட்டு மீனவர்களையும், படகுகளையும் விடுவித்திட வேண்டும்!

# தமிழ்நாட்டு மீனவர் பிரச்சினைக்கு தீர்வு காணும் வகையில் இந்தியப் பிரதமரிடம் - இலங்கை அதிபர் பேச்சு நடத்தியது வரவேற்கத்தக்கது!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப்பதிவு!

சென்னை, டிச. 18-

இலங்கை அதிபர் அனுர குமார திசநாயக்கே அவர்கள், பிரதமர் நரேந்திர மோடி அவர்களுடன் தமிழ்நாடு மீனவர்களின் பிரச்சினைகளுக்கு மனித நேயத்தின் அடிப்படையிலும் அமைதி வழியிலும் தீர்வு காண்பது குறித்தும், மோதலைத் தவிர்ப்பதை வலியுறுத்தியும் பேச்சு வார்த்தை நிகழ்த்தியது வரவேற்கத்தக்கது என்றும்; கைது செய்யப்பட்டுள்ள தமிழ்நாட்டு மீனவர்களையும், படகுகளையும் விடுவிப்பதையும் பரிசீலிக்க வேண்டும் என்றும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ள சமூக வலைதளப்பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

*இதுகுறித்து முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:*

**இலங்கைஅதிபர்அனுரகுமாரதிசநாயக்கே அவர்கள் பிரதமர் நரேந்திர மோடி அவர்களுடன் தமிழ்நாட்டு மீனவர்களின் பிரச்சினைகளுக்கு மனிதநேயத்தின் அடிப்படையிலும் அமைதி வழியிலும் தீர்வு காண்பது குறித்தும், மோதலைத் தவிர்ப்பதை வலியுறுத்தியும் பேச்சுவார்த்தை நிகழ்த்தியது வரவேற்கத்தக்கது.**

**இந்நிலையில், அனுர குமார திசநாயக்கே அவர்கள் இலங்கைக் கடற்படையால் கைது செய்யப்பட்டுள்ளதமிழ்நாட்டுமீனவர்களை விடுதலை செய்வதையும், பிடித்து வைத்துள்ள அவர்களது படகுகளை விடுவிப்பதையும் பரிசீலிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.**

**அத்தகைய நடவடிக்கை இந்தப் பேச்சு வார்த்தைகளில் நம்பிக்கையை விதைப்பதுடன், நமது இரு நாடுகளுக்கிடையேயான வலுவான உறவுக்கும் அமைதியான எதிர்காலத்துக்கும் வழிவகுப்பதில் ஆக்கப் பூர்வமான நகர்வாக அமையும்.**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

### செஞ்சியில்

## செஞ்சி மஸ்தான் நல உதவிகள் வழங்கினார்!

*செஞ்சி டிச 18-*

*செஞ்சி சட்டமன்ற தொகுதிகளில் தமிழக அரசின் 2000 ரூபாய் அரிசி, சர்க்கரை, பருப்பு உள்ளிட்டநிவாரண பொருட்கள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.*

*செஞ்சிவேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கம் வங்கியில்நடைபெற்ற நிகழ்ச்சி யில் செஞ்சி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் செஞ்சி மஸ்தான் கலந்து கொண்டு புயல் மழையால் பாதிக்கப்பட்ட குடும்ப அட்டை தாரர்களுக்கு 2000 ரூபாய், அரிசி சர்க்கரை பருப்பு உள்ளிட்ட நிவாரணப் பொருட்களை வழங்கினார்.*

*இதில் வட்டாட்சியர் ஏழுமலை, செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார், செஞ்சி பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலிமஸ்தான், சங்கசெயலாட்சியர்மாரியப்பன், வங்கி பொது மேலாளர் தேசிங்கு, நகர செயலாளர் கார்த்திக், பேரூராட்சி மன்ற கவுன்சிலர்கள் அஞ்சலை நெடுஞ்செழியன் உட்பட மற்றும் பலர் கலந்துகொண்டனர்.*

### முரசொலி நிர்வாக மேலாளர்

# ஜி.இளங்கோ மறைவு!

## கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!



**சென்னை, டிச.18-**

**'முரசொலி' நாளேட்டில் நிர்வாக மேலாளராகப் பணி புரிந்து வந்த ஜி.இளங்கோ (வயது 54) அவர்கள் நேற்று (17.12.2024) பிற்பகல் இயற்கைஎய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.**

**இச்செய்தியறிந்ததும் கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள்தமது ஆழ்ந்த இரங்கலைத்தெரிவித்து செய்தி வெளியிட்டுள்ளார்.**

இது குறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தி வருமாறு:-

முரசொலிநாளேட்டில்விநியோகப்பிரிவில் 27 ஆண்டுகள் பணி புரிந்து வந்த ஜி.இளங்கோ அவர்கள் உடல் நலக் குறைவின் காரணமாக மறைவுற்றார் என்ற செய்தியறிந்ததும் அதிர்ச்சியுற்றேன்.

முரசொலி அலுவலகத்திற்கு நான் வரும்போதெல்லாம் என்னை இன்முகத்துடன் வரவேற்ற காட்சிகள் இன்றும் என் மனதில் நிழலாடிக் கொண்டிருக்கிறது.

சிறிது நாட்களாக உடல் நலம் குன்றி மருத்துவ மனையில் சிகிச்சைப் பெற்று வந்த அவர் உடல் நலம் தேறி மீண்டும் பணிக்குத் திரும்பிவிடுவார் என நினைத்திருந்தேன்.

ஆனால், இன்று (17.12.2024) பிற்பகல் இறந்துவிட்டார் என்ற செய்திக் கேட்டு அதிர்ச்சியுற்றேன்.

அவரை இழந்து வாடும் அவரது குடும்பத்தாருக்கும் முரசொலி அலுவலகத்தில் பணியாற்றுவோருக்கும் எனது ஆழ்ந்தஇரங்கலைத்தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

# முரசொலி நிர்வாக மேலாளர் ஜி. இளங்கோ மறைவு !

## கழகத்தினர் - உறவினர் அஞ்சலி!

சென்னை டிச.18-

முரசொலி அலுவலகத்தின் நிர்வாகப் பிரிவின் மேலாளரும் தலைமைக் கழகப் பேச்சாளர் வழக்கறிஞர் ஆடுதுறை மு.உத்திராபதி அவர்களின் மைத்துனருமான ஜி.இளங்கோ (வயது 54) அவர்கள் உடல் நலக் குறைவினால் நேற்று (17.12.2024 செவ்வாய்க்கிழமை) மதியம் 1.45 மணியளவில் இயற்கை எய்தினார் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

தகவல் அறிந்ததும் முரசொலி அலுவலகத்தினரும், கழகத்தினரும் சென்னை, சூளைமேடு, அண்ணாசாமி தெருவில் உள்ள அவரது வீட்டிற்கு நேரில் சென்று மலர் வளையம் வைத்து இறுதி அஞ்சலி செலுத்தினர்.

மறைந்த ஜி. இளங்கோ அவர்கள், முரசொலி அலுவலகத்தில் விநியோகப் பிரிவிலும் நிர்வாகமேலாளராகவும் சுமார் 27 வருடங்கள் பணியாற்றினார்.

அன்னாருக்கு கவிதா என்ற மனைவியும், முத்து நாகலிங்கம் என்ற ஒரு அண்ணனும் அண்ணாமலை (எ) நலங்கிள்ளி என்ற ஒரு தம்பியும் மங்கை என்ற தங்கையும் உள்ளனர்.

அன்னாரது உடல் அவரது சொந்த ஊரான நாகைக்கு எடுத்துச் செல்லப்பட்டு இன்று (18.12.2024) நாகை மகாலட்சுமி நகரில் உள்ள அவரது இல்லத்தில் உறவினர்களின் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பின்னர் அங்கிருந்து எடுத்துச் செல்லப்பட்டு நல்லடக்கம் செய்யப்படுகிறது.

### பள்ளிக் கல்வித்துறை அலுவலர்கள் – ஆசிரியர்கள்

# ஒருங்கிணைந்து செயல்பட்டால் பல்வேறு சாதனை மாணவர்களை உருவாக்க முடியும்!

## முதன்மை கல்வி அலுவலர்களுக்கான ஆய்வுக் கூட்டத்தில் அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி பெருமிதம்!



*கோவை, டிச.18-*

*கோயம்புத்தூர் மாவட்டம், சூலூர், பாப்பம்பட்டி பிரிவு, கலைஞர் கருணாநிதி பொறியியல் கல்லூரியில், நேற்று முன்தினம் (16.12.2024) அனைத்து மாவட்ட முதன்மை கல்வி அலுவலர்களுக்கான மாநில அளவிலான இரண்டு நாள் பணிஆய்வுக் கூட்டம் பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தலைமையில் நடைபெற்றது.*

*இந்நிகழ்ச்சியில், பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி பேசியதாவது:-*

*தமிழ்நாடு முதலமைச்சர் பள்ளிக்கல்வித்துறைக்கு பல்வேறு திட்டங்களை அறிவித்து சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள். புதுமை பெண் திட்டம், காலை சிற்றுண்டி திட்டம், தமிழ்புதல்வன் திட்டம் என எண்ணற்ற திட்டங்களை சிறப்பாக அறிவித்து செயல்படுத்தி வருகிறார்கள். மேலும், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கல்வியையும், சுகாதாரத்தையும் தனது இரண்டு கண்களாக பார்க்கின்றார்கள். அனைவரும் இணைந்து ஒரு சிறந்த கல்வி கட்டமைப்பை உருவாக்கி கொண்டு இருக்கிறோம். பள்ளிகளில் மாணவர்களின் கற்றல் கற்பித்தல் திறனை மேலும் மேம்படுத்துவதற்கு பல்வேறு நடவடிக்கைகளை பள்ளிக் கல்வித் துறை மேற்கொண்டு வருகின்றது.*

*அரசின் சார்பில் பள்ளிக் கல்வித் துறையில் கொண்டு வந்துள்ள திட்டங்கள் அனைத்தும் முறையாக செயல்படுத்தப்பட்டுள்ளதா, விலையில்லா பொருட் கள் மாணவர்களை சென்றடைகிறதா, குறிப்பாக மழையால் பாதிக்கப்பட்ட மாவட் டங்களில், மாணவர்களுக்கு புத்தகங்கள், சீருடைகள் முறையாக சென்றடைந்துள்ளதா என்பது குறித்தும் இந்தஆய்வுக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது.*

*அனைத்து மாவட்டத்தில் உள்ள மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள், அந்தந்த மாவட்டத்தில் உள்ள பள்ளிகளை மேம்படுத்துவதற்கு, பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்கள். வருகின்ற மார்ச் மாதத்தில் பொதுத்தேர்வு நடைபெறவுள்ளது. அதற்கான முன்னேற்பாடு பணிகளை மேற்கொள்ள அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது. எந்த மாவட்டங்கள் சிறப்பாக செயல்படுகின்றதோ அந்த மாவட்டத்திற்கு பாராட்டுக்களையும், எந்த மாவட்டங்கள் குறைவான செயல்பாட்டினை கொண்டுள்ளனவோ அதற்கான காரணங்கள் குறித்தும், ஆய்வு செய்து, வருங்காலங்களில் அதன் செயல்பாட்டினை மேம்படுத்தி ஊக்கப்படுத்துவதற்கும், இதுதொடர்பாக அனைவரின் கருத்துக்களை பரிமாற்றம் செய்வதற்கும், சுதந்திரமாக தங்கள் கருத்துக்களை பதிவிடவும். இரண்டு நாட்கள் இந்த கூட்டம் நடத்தப்படுகின்றது.*

*இக்கூட்டத்தில் வழங்கப்படுகின்ற அறிவுரைகளை முதன்மைகல்வி அலுவலர்கள் , மாவட்ட கல்வி அலுவலர்கள், தங்கள் மாவட்டத்தில் உள்ள தலைமையாசிரிகளுக்கு முழுமையாக கொண்டு சேர்க்கவேண்டும்.*

*நடைபெறவுள்ள 10-ஆம் வகுப்பு, 12-ஆம் வகுப்பு பொதுத்தேர்வு தேர்ச்சி விகிதத்தினை அதிகரிக்கவும், தேர்ச்சி பெறாத மாணவர்களை தேர்ச்சிப்பெற செய்யவும், போதிய நடவடிக்கைகளை முதன்மை கல்வி அலுவலர்கள் மேற்கொள்ள வேண்டும்.*

*அரசு நடுநிலைப்பள்ளி, உயர்நிலைப்பள்ளி, மேல்நிலைப்பள்ளி என அனைத்து பள்ளிகளிலும் உயர்தர ஆய்வகங்கள் கொண்டுவருவதற்கும், கணினிகளில் பழைய ஆப்ரேட்டிங் சிஸ்டம் எல்லாம் மாற்றப்பட்டு, தற்போது என்ன மாதிரி புதிய ஆப்ரேட்டிங் சிஸ்டம் பயன்பாட்டில் உள்ளதோ அவற்றை பயன்படுத்தவும், ஏற்கனவே உள்ள உயர்தர ஆய்வகங்களில் எந்த பொருட்கள் எல்லாம் அதிக நாள் பயன்பாட்டில் உள்ளதோ அவற்றிற்கு பதிலாக புதியவற்றை மாற்றவும், அதற்கான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு மாணவ மாணவியர்களின் பயன்பாட்டிற்கு புதிய உயர்தர ஆய்வகங்கள் கொண்டுவரப்பட்டுள்ளன.*

*இதுபோன்று அரசின் பல்வேறு நலத்திட்டங்களால் ஒவ்வொரு ஆண்டும் பொதுத்தேர்வில் மாணவ மாணவியர்களின் தேர்ச்சிவிகிதம் அதிகரித்துக் கொண்டு இருக்கிறது.*

*அரசுப் பள்ளிகள் என்பது வறுமையின் அடையாளம் அல்ல, அவை பெருமையின் அடையாளம். அதன்படி கோயம்புத்தூர் மாவட்டம், அரசூர், அரசு மேல்நிலைப் பள்ளியில் ஏழாம் வகுப்பு படிக்கும் மாணவர்கள் செல்வன். கே.ஐசக் ஜெபக்குமார், செல்வன் ஆர்.மருதீஷ், செல்வன். ஜெ.வீரமணி ஆகியோர் வடிவமைத்த பார்வை குறைபாடுள்ளவர்களுக்கான ஸ்மார்ட் வாக்கிங் ஸ்டிக் மற்றும் பார்வையற்றோருக்கான கண்ணாடி ஆகிய இரண்டு கருவிகளை வடிவமைத்து, ஒரு கல்லூரியில் நடைபெற்ற அறிவியல் கண்காட்சியில் அவற்றினை காட்சிப்படுத்தி, பரிசு பெற்றனர்.*

*அந்த நிகழ்ச்சி அனைத்து சமூக வலைதளங்களில் பரவி 80 லட்சத்திற்கும் அதிகமானவர்களால் பாராட்டப்பட்டு வருகிறது. இரண்டு புதிய கருவிகளின் கண்டுபிடிப்புகளை உருவாக்கிய மூன்று மாணவர்களுக்கு மனதார பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.*

*இவர்கள் மட்டுமல்லாமல் ஒவ்வொரு பள்ளியிலும் உள்ள மாணவர்கள் ஏதாவது ஒருவிதத்தில் தங்கள் திறமையை வெளிப்படுத்திக் கொண்டுதான் இருக்கிறார்கள். மாணவ மாணவியர்கள், ஆசிரியர்கள், பள்ளி தலைமையாசிரியர்கள், மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர்கள், வட்டார கல்வி அலுவலர்கள், அரசு என நாம் அனைவரும் ஒருங்கிணைந்து செயல்படுவதால் தான் அரசுப்பள்ளி மாணவர்களால் இதுபோன்று பல்வேறு சாதனைகள் செய்து வருகிறார்கள். இந்தப்பள்ளிக்கு மாநகராட்சி சார்பில் பொது நிதியிலிருந்து ரூ.66 இலட்சம் ஒதுக்கீடு செய்துள்ளனார். அதற்கு மாநகராட்சி ஆணையாளர் அவர்களுக்கு என்னுடைய பாராட்டுக்களை தெரிவித்துக்கொள்கிறேன் என பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்கள் தெரிவித்தார்.*

*SCERT மூலம் நடத்தப்பட்ட மாநில அளவிலான Role Play (நாடகம்) மாநில அளவில் முதலிடத்தை கோயம்புத்தூர் மாவட்டம், அரசு உயர்நிலைப்பள்ளி காந்திமாநகர் பள்ளி மாணவர்களான கிருஷ்ணன், குகனேஸ்வரன், தருண்குமார், ஜெசிகா ஜோன், லக்கணர் ஆகியோர் பெற்றுள்ளனர். மேலும், தேசிய அளவிலான போட்டிக்கும் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். இந்த மாணவர்களை பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி பாராட்டினார்.*

# 3 ஆண்டுகளில் மட்டும் 7 இலட்சம் லிட்டர் பால் விற்பனை அதிகரிப்பு!

## அமைச்சர் ஆர்.எஸ்.இராஜகண்ணப்பன் தகவல்!



*சென்னை, டிச.18-*

*திராவிட மாடல் ஆட்சியின்கீழ் ஆவின் நிறுவனத்தின் சாதனையாக கடந்த 3 ஆண்டுகளில் மட்டும் சுமார் 7 இலட்சம் லிட்டர் பால் விற்பனை அதிகரித்துள்ளது.*

*தமிழ்நாடு முழுவதும் அமைந்துள்ள 27 ஒன்றியங்கள் மற்றும் சென்னை மெட்ரோ மூலமாக சுகாதாரமான முறையில் தரம் ஒன்றே குறிக்கோளாகக் கொண்டு பால் மற்றும் சுமார் 200 வகையான பால் உபப்பொருட்களை தயாரித்து நுகர்வோர்களுக்கு நியாயமான விலையில் ஆவின் நிறுவனம் விற்பனை செய்து வருகிறது. பால் விற்பனையில் தமிழகத்தின் முன்னோடி நிறுவனமாகத் திகழ்ந்து வருகிறது.*

*தமிழ்நாடு முழுவதும் கடந்த 2019-2020ஆம் ஆண்டில் சுமார் 23 இலட்சம் லிட்டராக இருந்த ஆவின் பால் விற்பனை தற்போது 2024-2025இல் சுமார் 7 இலட்சம் லிட்டர் அதிகரித்து 30 இலட்சம் லிட்டர் அளவில் விற்பனையை அதிகரித்துள்ளது.*

*மேலும் அனைத்து மாவட்டங்களின் புற நகர்ப் பகுதிகளில் ஆவின் பால் விற்பனையை அதிகரிக்கத் திட்டமிடப் பட்டு அதன் ஒரு பகுதியாக பொதுமக்கள் உடல் நலத்திற்கு ஏற்றவாறு வைட்டமின் ஏ மற்றும் டி செறிவூட்டப்பட்டு அனைவரும் விரும்பும் வகையில், புதிய வகையான கிரீன் மேஜிக் ப்ளஸ் பால் சோதனை அடிப்படையில் சில ஒன்றியங்களில் அறிமுகப்படுத்தப்பட உள்ளது.*

*புதியதாக அறிமுகப்படுத்தப்பட்ட பால் பொது மக்களின் விருப்பத்திற்கு ஏற்ப விற்பனை செய்யப்படும். மேலும், தற்போது விற்பனை செய்யப்பட்டு வரும் அனைத்து வகையான பாலின் விற்பனை அளவை குறைக்கவில்லை என்பதை தெரிவித்துக் கொள்கிறோம். என்று அமைச்சர் ஆர்.எஸ். இராஜகண்ணப்பன் தெரிவித்துள்ளார்.*



கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன், சிவகங்கை மாவட்டம், கல்லல் ஊராட்சி ஒன்றியம், கண்டரமாணிக்கம் ஊராட்சிக்குட்பட்ட வலையப்பட்டி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் நேற்று முன்தினம் (16.12.2024) நமக்கு நாமே திட்டம் 2023–24ன் கீழ் அமைக்கப்பட்டுள்ள மெய்நிகர் (Smart Class) வகுப்பறையினை மாணாக்கர்களின் கற்றல் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார்.உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ஆஷா அஜித், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் திருமதி கா.வானதி, மாவட்ட ஊராட்சி உறுப்பினர் திருமதி மஞ்சரி லெட்சுமணன், மணிகண்டன் (கண்டரமாணிக்கம் வளச்ச்சிக்குழு) உட்பட பலர் உள்ளனர்.